# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, AVINASHI

## MCOP. No.14/2016 C/W MCOP 7,11/2017

## RW - 1

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : | ஷேக் முகம்மது | | : |
| **Father Name** | : | முகம்மது சுல்தான் | | : |
| **Village** | : | | **Calling** | : |
| **Taluk** | : | | **Age** | : /2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of June 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்போது அவிநாசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்ற அழைப்பாணையின் பேரில் இந்த வழக்கில் என்னை சாட்சியமளிக்க வேண்டி அவிநாசி மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் என்னை அங்கீகரித்து கொடுத்த 16.06.2026-ம் தேதியிட்ட கடிதம் சா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்கிறேன். இந்த அழைப்பாணையில் கேட்கப்பட்ட TN-56-C-4818 டாடா ஏசி வாகத்தின் 28.06.2016-ம் தேதியில் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வறிக்கை உண்மை நகல் சா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்கிறேன். (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது. ) அந்த டாடா ஏசி வாகனத்தின் ஆய்வின் போது அந்த ஓட்டுநருக்கு சரக்கு வாகனம் ஓட்டுவதற்கு பேட்ச் இல்லை என்பதற்கு ரூ.1,000/- அபராதம் விதிக்கப்பட்டது சம்பந்தமான வாகன சோதனை அறிக்கை உண்மை நகல் சா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்கிறேன். அந்த டாடா ஏசி வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் சண்முகம் என்பவரின் ஓட்டுநர் உரிமம் கணினி நகல் சா.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்கிறேன். அந்த ஓட்டுநர்

சண்முகம் ரூ.1,000/– அபராதம் செலுத்தியதற்கான ரசீது உண்மை நகல் சா.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

மேற்படி டாடா ஏசி ஓட்டுநர் சண்முகம் என்பவருக்கு கடந்த 10.03.2011–ம் தேதியில் ஓட்டுநர் உரிமம் பெருந்துறை வட்டார போக்குவரத்து அலுவலகத்தால் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சண்முகத்தின் ஓட்டுநர் உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியான பெருந்துறை வட்டம், சென்னிமலை பக்கம் உள்ள கொடுமணல் என்ற ஊர் அவிநாசி வட்டார போக்குரவத்து அலுவலக எல்லைக்குள் வருவதில்லை என்றால் சரிதான். அந்த பெருந்துறை வட்டார போக்குரவத்து அலுவலகத்தில் பொதுப்பணி வில்லை (பேட்ச்) எடுத்திருந்தால் அது குறித்த விபரம் அவிநாசி வட்டார போக்குரவத்து அலுவலகத்திற்கு தெரிய வராது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.06.18 16:04:38 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**